## பின்னலாடை உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்காக

# திருப்பூரில் நவீன நிரந்தர கண்காட்சி வளாகம் அமைத்திடுக!

## சட்டப் பேரவையில் திருப்பூர் க.செல்வராஜ் வலியுறுத்தல்!

**சென்னை, ஏப். 23 -**

**சட்டப் பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியத்தில் திருப்பூர் தெற்கு தொகுதி உறுப்பினர் க.செல்வராஜ் பேசுகையில் உலகத் தரம் வாய்ந்த சிகிச்சைகளை திருப்பூர் மாவட்ட மக்களுக்கு வழங்கிய முதல்வருக்கு நன்றி என்று தெரிவித்தார்.**

**சட்டப் பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் திருப்பூர் க.செல்வராஜ் பேசியதாவது:**

2025 ஆம் ஆண்டின் சிறப்பு வாய்ந்த நிதிநிலை அறிக்கை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிகுந்த பசியும், நீங்காத நோயும், வெளியே இருந்து வந்த தாக்கி அழிவு செய்யும் பகையும் சேராமல் விளங்குவதே நல்ல நாடாகும் என்ற வள்ளுவனின் குறளுக்கேற்ப முதலமைச்சர் அவர்கள் சிறப்பான ஆட்சியினை நடத்தி வருவதை நாடறியும், உலகறியும். ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பதை உறுதிப்படுத்திய budget; அனைத்துத் துறைகளுக்கான budget; சமூக ஏற்றத்தாழ்வுகளை களையும் budget அறிவித்தும் தமிழ்நாட்டிற்கான அனைத்து உரிமைகளையும் மறுக்கும் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை சீரழிக்க துடிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகளுக்கு உயிரே போனாலும் அடிபணிய மாட்டோம் என தீரத்தோடும், (மேசையைத் தட்டும் ஒலி) வீரத்தோடும், விவேகத்தோடும் தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்று ஒன்றிய அரசுக்கு எதிராக போர் முரசு கொட்டியும், சட்டமன்றப் பேரவையில் நிறைவே ற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் மாநில சுயாட்சிக்கு எதிராகவும், மாநில உரிமைகளைப் பறிக்கும் நோக்கில் செயல்படும் ஆளுநரின் செயலுக்கெதிராக மாண்பமை உச்ச நீதிமன்றம் வரை சென்று நீதியை நிலைநாட்டி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை பெற்று அனைத்து மாநில அரசுகளின் சுயாட்சியை காப்பாற்றி பேரவையில் வீற்றிருக்கும் ‘அப்பா’ என்று மாணவ சமுதாயத்தில் அன்போடு அழைக்கப்படும் கழகத் தலைவர் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர்களின் எதிர்காலம், இளைஞர் அணிச் செயலாளர் பொறுப்பினை திறம்பட மேற்கொண்டு தனது உழைப்பாலும், செயல்பாடுகளாலும், தொண்டர்களோடு எளிமையாக பழகும் அணுகுமுறையாலும் மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றிருக்கும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், கழக பொதுச் செயலாளர் அவை முன்னர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தின் அமைச்சர்களான மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும், திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்களுக்கும். அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், துறைச் செயலாளர்கள் மற்றும் பேரவை அலுவலர்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, என் தாய்க்கும், தலைவனுக்கும் தலை வணங்கி எனது உரையை துவங்குகின்றேன்.

### விசைத்தறி உரிமையாளர்கள் போராட்டம் வாபஸ்!

கடந்த ஒரு மாத காலமாக கோவை, திருப்பூர் விசைத்தறி தொழிலாளர்களுக்கும், விசைத்தறி உற்பத்தியாளர்களுக்கும், விசைத்தறி உரிமையாளர்களுக்கும் நடந்த போராட்டத்தை நேற்றைய முன்தினம் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே அமைச்சர்களான மு.பெ. சாமிநாதன் அவர்களும், அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அவர்களும், அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் முன்னிலையில்



பேச்சுவார்த்தை நடத்தி, கழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், முடித்தமைக்கு இந்தப் பேரவையின் சார்பாகவும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசியல் வரலாற்றிலே முதன்முறையாக கைத்தறித்துறை மானியக் கோரிக்கையின் போது, விசைத்தறியை நவீனப்படுத்தும் நோக்கத்தோடு நாடா தறிகளை நாடா இல்லாத தறிகளாக மாற்றிடவும், ஒரு நாளைக்கு 3 இலட்சம் மீட்டர் தரமான துணிகளை உற்பத்தி செய்யவும், 3,000 தறிகளுக்கு மானியமாக தலா ரூபாய் 1 இலட்சம் என சுமார் 600 விசைத்தறி உரிமையாளர்களின் குடும்பங்களுக்கு பயன்பெறும் வகையில் 30 கோடி ரூபாயும், தமிழகத்தில் 5 இடங்களில் விசைத்தறிகளுக்கான பொதுப் பயன்பாட்டு மையம், சர்வதேச தரத்திலான பரிசோதனை மையமாக திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் மற்றும் உள்கட்டமைப்புகள் அமைக்க ரூபாய் 20 கோடி என மொத்தம் 50 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்து, நிதி ஒதுக்கி விசைத் தறியாளர்களின் குடும்பத்தை காப்பாற்றியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கும், ஜவுளித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மக்களுக்கான மருத்துவ சேவை!

மக்களுக்கான மருத்துவ சேவைகள் அளித்து வருவதிலே திராவிட மாடல் அரசு மிகச் சிறப்பான திட்டங்களை வகுத்து மருத்துவ சேவை செய்து வருகிறது. கழக அரசு ஆட்சிப் பெறுப்பேற்றதிலிருந்து தற்போது வரை திருப்பூர் மாவட்டத்தில் ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில் 11.28 ஏக்கர் பரப்பளவில் 25 துறைகளை உள்ளடக்கிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும், ரூபாய் 16.63 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனை கட்டடங்களும் திறக்க ப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 144 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலைய பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப் பீட்டுத் திட்டத்தின் மூலமாக 12,646 நோயாளிகளுக்கு ரூபாய் 13 கோடி மதிப்பில் உயர்தர சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், “இன்னுயிர் காப்போம் 48” திட்டத்தின்மூலம் விபத்துகளில் பாதிக்கப்பட்ட 11,000க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இத்தகைய உலகத்தரம் வாய்ந்த சிகிச்சைகளை திருப்பூர் மக்களுக்கு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு திருப்பூர் மக்களின் சார்பாக என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய்க்கான சிறப்பு மையம் 1.5 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்த பூர்வாங்கப் பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன. கழக அரசின் பங்குத் தொகையாக 60 கோடி ரூபாய் மற்றும தனியார் பங்களிப்பாக 30 கோடி ரூபாய் என 90 கோடி மதிப்பில் புற்றுநோய்க்கான நவீன சிறப்பு மையம் அமைக்கப்படுகிறது. 25 கோடி ரூபாய் மதிப்பிலான கதிர்வீச்சு இயந்திரம் வாங்கப்பட்டு, திருப்பூர் வந்தடைந்துள்ளது. இந்த புற்றுநோ ய்க்கான மையம் செயல்படும் பட்சத்தில் வருடத்திற்கு 10 ஆயிரம் பேர் வரை பயன் பெறுவார்கள். அரசு சார்பில் வழங்க வேண்டிய 60 கோடியில் 24 கோடி ரூபாய் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 36 கோடி ரூபாய் விரைவில் விடுவிக்கும்பட்சத்தில் புற்று நோய் மையம் அமைக்கும் பணிகள் நிறைவு பெறும் என்றும், எனது சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்தாண்டு 30 இலட்சம் ரூபாய் புற்றுநோய் மையத்தின் நுழைவு வாயில் அமைக்க பரிந்துரை செய்துள்ளேன் என்பதையும் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், புற்றுநோய் சிறப்பு மையம் செயல்பாட்டுக்குவரும் பட்சத்தில் நான்கு கதிர் வீச்சு சிறப்பு மருத்துவர்கள் பணியில் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தேவைப்படுவதால் பணியிடம் உருவாக்கித் தருமாறு துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தற்போது திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தினந்தோறும் 2,500 முதல் 3,000 வரை வெளி நோயாளிகளும், உள் நோயாளிகளாக 1,200 பேரும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நரம்பியல் சிறப்பு மருத்துவர்கள் மற்றும் சிறுநீரக சிறப்பு மருத்துவர்கள் இல்லாததால், அருகிலுள்ள கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக மருத்துவர்களை நிய மித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதுள்ள உணவு பழக்கவழக்கங்களால் அதிகளவில் இருதயம் சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின்றன. மேலும், நோயாளிகளை சிகிச்சைக்காக கோவை அல்லது சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய சூழல் உள்ளது. எனவே, முழு மருத்துவ வசதிகளுடன் இருதய சிகிச்சை மருத்துவர்களை நியமித்துத் தருமாறு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொழிலாளர்கள் திருப்பூரை நோக்கி வந்தவண்ணம் உள்ளதால், நாளுக்குநாள் பெருகிவரும் மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டு, சென்னை, கோவை, மதுரை போன்ற பல்வேறு மாவட்டங்களில் அமைத்திருப்பது போலவே, திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் PETCT Scan மற்றும் Cath Lab ஆகிய அதிநவீன மருத்துவக் கருவிகளை நிறுவிட வேண்டுமென அமைச்சர் அவர்களை இப்பேரவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக 50 டாக்டர் இடங்களை உயர்த்திக் கொடுத்ததற்கும், திருப்பூர் மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நவீன உயர் தொழில்நுட்ப மருத்துவக் கருவிகளை 298 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கியதற்கும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சிகளை ஊக்குவிக்கும் வகையில், தானே ஒரு முன்னுதாரணமாக விளங்கி, தமிழ்நாட்டு மக்களின் உடல்நலனில் முனைப்போடு அக்கறை செலுத்தி, அரவணைத்து, மாபெரும் மருத்துவத் துறையை வழிநடத்துகிற முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், திராவிட மாடல் அரசுக்கும் பெருமைச் சேர்க்கும் வகையில் திகழும் அமைச்சர் மா.சு. அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே கேட்டு விட்டேன். Speedஆக எப்படிச் செல்ல முடியும்? ஓடத்தான் முடியும்.

திருப்பூர் என்றவுடன் பின்னலாடைகள் மற்றும் பனியன் உற்பத்தியும், அதனைச் சார்ந்த உப தொழில்களும், அதில் பணிபுரியும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும்தான் நினைவுக்கு வருவார்கள். திருப்பூரில் தற்போது உள்நாட்டு பனியன் தொழில் நடத்துவதே பெரும் சவாலாக அமைந்துள்ளது என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

### திருப்பூர் பனியன் தொழில்!

குறிப்பாக, வங்கதேச ஆடைகள் அதிகளவில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுவதால், உள்நாட்டு பனியன் ஆடைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ஆடைகளின் இறக்குமதிக்கு அதிகமான வரிச் சலுகைகள் உள்ளதாலும், மானியங்கள் அதிகளவில் கிடைப்பதாலும் குறைந்த விலைக்கு ஆடைகளை உருவாக்குகிறார்கள். இதனால் திருப்பூர் பனியன் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் ஜவுளித் தொழிலுக்கு வங்கதேச ஆடைகள் சிக்கல்களை உருவாக்கி வருவதால், இறக்குமதியாகும் வங்கதேச ஆயத்த ஆடைகளுக்கு Countervailing Duty அல்லது Antidumping Duty போன்ற வரிகளை அதிகரிக்க ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி, உள்நாட்டு ஜவுளித் தொழிலை பாதுகாத்திட வேண்டுமென முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சர்வதேச அளவில் ஏற்றுமதி வர்த்தகத்திலும் சரி, உள்நாட்டு வர்த்தகத்திலும் சரி நமது பின்னலாடைத் தொழில் கடுமையான போட்டியைச் சந்தித்து வருவதால், வெளிநாட்டு, வெளிமாநில வர்த்தகர்களைக் கவரும் வகையில், திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்காகவும் திருப்பூரில் நவீன நிரந்தர கண்காட்சி வளாகம் அமைத்துத் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, ஆண்டொன்றுக்கு சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்றுமதியும், 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்நாட்டு வர்த்தகமும் நடைபெற்று வருவதால், முதலமைச்சர் அவர்கள் தொழில் நிறுவனங்களுக்கான சொத்து வரி மற்றும் மின் கட்டணத்தில் சில சலுகைகளை அறிவித்தால், திருப்பூரிலிருந்து மட்டும் ஒரு இலட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் வர்த்தகத்தை உருவாக்க வாய்ப்பு கிடைக்கும் என்பதை முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்கு இப்பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாமிய மக்கள் மிக அதிகமாக வசிக்கும் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் (தெற்கு) தொகுதியில் இஸ்லாமிய மாணவமாணவியர்கள் அரபிக் கல்வி பயில தொலைவில் உள்ள மாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய சூழல் நிலவி வருகிறது. இஸ்லாமிய பெண் மாணவிகள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று தங்கி கல்வி பயில முடியாத நிலை உள்ளது.

சிறுபான்மையின மக்களின் காவலர் முதலமைச்சர் அவர்களிடம் திருப்பூரில் அரசு சார்பில் அரபிக் கல்லூரி அமைத்து கொடுத்திட கடந்த கூட்டத்தொடரின்போது கோரிக்கை வைத்திருந்தேன். அதனை தொடர்ந்து முதல்வர் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உயர் கல்வித் துறைக்கு பரிந்துரை செய்துள்ளார். உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இஸ்லாமிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான திருப்பூரில் அரசு அரபிக் கல்லூரி அமைத்து கொடுக்க வேண்டுமாய் அனைத்து இஸ்லாமிய மக்களின் சார்பாக இப்பேரவையின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் பணி சிறக்க தொகுதி மக்களின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்து, எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்றித்தருமாறு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். திருப்பூர் (தெற்கு) தொகுதியின் கழக வெற்றிக்காக பாடுபட்ட கழக உடன் பிறப்புகளுக்கும், கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும், வாக்களித்த பொதுமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினை இப்பேரவையில் தெரிவித்துக்கொண்டு, என் தாய்க்கும் தலைவனுக்கும் தலை வணங்கி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

திருப்பூர் தெற்கு தொகுதிக்குட்பட்ட 21 மாநகராட்சி வார்டுகளில் 11 அங்கன்வாடி மையங்கள், 11 மேற்கூரைகள், 7 நியாய விலைக்கடைகள், 3 பள்ளிகளில் 6 வகுப்பறைகள், 10 ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள், 2 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 7 பள்ளிகளுக்கு 383 செட் மேசை நாற்காலிகள், 7 போர் வெல்கள், 20 மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர், 5 பொது கழிப்பிடங்கள், 9 பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் கான்கிரீட் சாலைகள், 2 பகுதிகளில் தார் சாலைகள், 1 மாநகராட்சி நடுநிலை பள்ளிக்கு விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல், மாநகராட்சி பள்ளி, அங்கன்வாடி மையம் மற்றும் நியாயவிலை கடைக்கு 2 சுற்றுச்சுவர்கள், 2 பேருந்து நிழற்க் கூரைகள் போன்ற பணிகளுக்கு மேம்பாட்டு நிதியினை அதிகரித்து தர வேண்டும்.

இவ்வாறு க.செல்வராஜ் பேசினார்.

---

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

நாமக்கல், ஏப். 23 -

நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நடத்துவது தொடர்பாக மாவட்ட கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (23 ந் தேதி புதன்கிழமை) காலை 10 மணிக்கு திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம்



அருகே உள்ள கொங்கு சமுதாய கூடத்தில் மாவட்ட அவைத் தலைவர் இரா. நடன சபாபதி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : ஒன்றிய நகர பேரூர் பகுதி கிளை கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தேர்வு குறித்து, கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# அமைச்சர் பொன்முடி மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி மனு தாக்கல்!

## மனுவை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவு!

மதுரை, ஏப். 23 -

கடந்த ஏப்ரல் ஐந்தாம் தேதி சென்னையில் பெரியார் பெருத்தொண்டர் திருவாரூர் தங்கராசு அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட தமிழக வனத்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் தான் ஒரு பெரியாரின் தொண்டர் என்றும் பகுத்தறிவு பேராசிரியர் அணியில் இருந்ததாகவும் அப்பொழுது அடல்ஸ் ஒன்லி என்ற பெயரில் பட்டிமன்றம் நடந்ததாகவும் அந்த பட்டி மன்றத்தில் நடந்ததை குறித்து விவரித்தார்.

கூட்டத்தில் சைவம் மற்றும் வைணவம் ஆகிய குறித்து அவதூறாகவும் மதக்கலவரங்களை உண்டாக்கும் வகையில் பேசி உள்ளார். எனவே இவர் மீது உரிய வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என புதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். புகாரின் மீது இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று நீதிபதி தனபால் முன்பு விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் அன்பு நிதி. மனுதாரர் புகார் மனு விசாரணை செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. எனவே இதில் வழக்குப் பதிவு செய்ய தேவையில்லை. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

இதனை பதிவு செய்த நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தார்.

# மாதவரத்தில் தண்ணீர் பந்தல் திறப்பு!

மாதவரம், ஏப். 23-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, நீர் மோர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டம் காவாங்கரை பேருந்து நிறுத்தம் அருகே, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் அ. சாந்தகுமார் ஏற்பாட்டில் 23 அ வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் அவர்களின் தலைமையில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும், பேருந்தில் செல்பவர்களுக்கும் இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய், கிர்ணிப்பழம், நீர்மோர், குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, முன்னாள் ஒருங்கிணைந்த இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாய கண்காணிப்பு குழு தலைவர் எ.செ.எத்திராசன் அவர்களின் மறைவிற்கு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, ஜெ.ஜெயபால், கல்பட்டு ராஜா, ஜி.ரவிச்சந்திரன், ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், தே.முருகவேல், வி.ஜி.பிரபாகரன், பி.கே.டி.முரளி, வே.கணேசன், கு.செல்வமணி, பி.தெய்வசிகாமணி,செயற்குழு உறுப்பினர் அப்துல் சலாம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில், ரூ 56.47 கோடி மதிப்பீட்டில் அரசு மாதிரி பள்ளி மற்றும் மாணவியர் விடுதி கட்டிடங்கள் கட்டும் பணியின் இறுதி கட்டப் பணிகளை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டார். ஆய்வின்போது தமிழக பள்ளிக்கல்வித்துறை உயர் அதிகாரி சுதன் மற்றும் திருச்சி பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் வெங்கடேசன், உதவி பொறியாளர் சாருக்ஷா பேகம், செயற்பொறியாளர் அன்பரசி மற்றும் துவாக்குடி நகர மன்ற தலைவர் காயாம்பு மற்றும் துவாக்குடி நகராட்சி வார்டு கவுன்சிலர்கள் என ஏராளமானோர் உடன் இருந்தனர்.